வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press Release no:5 date: 05.09.2024

**V.O.Chidambaranar Port Authority celebrated the**

**153rd Birth Anniversary of V.O.Chidambaranar**

V.O.Chidambaranar Port Authority celebrated the 153rd Birth Anniversary of V.O.Chidambaranar on 05.09.2024. Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, V.O. Chidambaranar Port Authority, garlanded the Statue of V.O. Chidambaranar in the Port premises. Subsequently, the Chairperson, along with Shri V. Suresh Babu, Deputy Chairperson (i/c) and Chief Mechanical Engineer, VOC Port Board Members, Officers, Staff, and Port School children, paid floral tributes to the esteemed freedom fighter.

In the function organised today, Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, V.O. Chidambaranar Port Authority, in his presidential address recalled the sacrifices made by V.O.Chidambaranar and his indomitable courage and relentless efforts made by him in starting the first Swadesi Shipping Company. He also stated that V.O. Chidambaranar is remembered as a symbol of courage and commitment to national and economic self-sufficiency.

Guest speaker Shri P. Sankaralingam, former Senate Member of Manonmaniam Sundaranar University, delivered an inspirational speech. He highlighted numerous incidents that exemplify V.O. Chidambaranar's multi-dimensional values, including his role as a freedom fighter, his commitment to social equality, his courage, his advocacy for self-reliance, and his fight against corruption.

Shri S.P.Mohan Kumar, Secretary, V.O.Chidambaranar Port Authority, welcomed the gathering. Cultural Programmes were also conducted as a part of the celebrations. The Chairman gave away the prizes to the winners of elocution and essay writing competitions conducted as part of the 153rd Birth Anniversary of V.O.Chidambaranar. Vote of thanks was delivered by Shri S.Selvi Meena, Hindi Officer & Senior Assistant Secretary, V.O.Chidambaranar Port Authority.

The above details were released in a Press-Release by V. O. Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

பத்திரிக்கைச் செய்தி எண் :5 தேதி : 05.09.2024

## வ.உ.சிதம்பரனாரின் 153வது பிறந்த தினவிழா கொண்டாட்டங்கள்

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 153-வது பிறந்த தினவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. துறைமுக வளாகத்தில் உள்ள வ.உ.சிதம்பரனாரின் திருவுருவ சிலைக்கு வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ, அவர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய துணைத் தலைவர் மற்றும் தலைமை இயந்திரப் பொறியாளரான திரு. வி. சுரேஷ் பாபு, துறைமுக சபை உறுப்பினர்கள், துறைமுக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் இணைந்து வ.உ.சிதம்பரனாரின் திருவுருவ சிலைக்கு மலர் துவி மரியாதை செலுத்தினார்கள்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ. அவர்கள் தன்னுடைய சிறப்புரையில், வ.உ.சிதம்பரனார் அவர்களின் தேசப்பற்று பற்றியும், அவர் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சுதேசி கப்பல் நிறுவனத்தை ஆரம்பிக்க எடுத்த விடாமுயற்சியினையும், சுதந்திர போராட்டத்திற்காக அன்னார் பட்ட துயரங்களையும் எடுத்துரைத்தார்கள். மேலும் தேசிய மற்றும் பொருளாதார தன்னிறைவைப் பெறுவதில் வ.உ.சிதம்பரனாரின் தைரியமும் அர்ப்பணிப்பும் இன்றும் அவரது அடையாளமாக நினைவு கூறப்படுகிறது என்றும் கூறினார்.

சிறப்புப் பேச்சாளாராக பங்கேற்ற மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் செனட் உறுப்பினரான திரு. ப. சங்கரலிங்கம் அவர்கள் வ.உ.சிதம்பரனாரின் பல பரிமாணங்களை எடுத்துக்காட்டு சம்பவங்களுடன் விளக்கினார். உதாரணமாக, சுதந்திர போராட்டத்தில் அவரின் பங்கு, சமூக சமத்துவத்திற்காக அவரின் அர்ப்பணிப்பு, அவரின் துணிச்சல், ஊழலுக்கு எதிரான அவரது போராட்டம் போன்றவற்றை விளக்கி கூறினார்.

இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவரையும், திரு எஸ். பி. மோகன் குமார், செயலர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் அவர்கள் வரவேற்றுப் பேசினார். விழாக் குழுவினரால் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள். இறுதியாக திருமதி. எஸ். செல்வி மீனா, இந்தி அதிகாரி மற்றும் மூத்த உதவி செயலாளர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி